தெமாசெக் ஆய்வு 2025 சிறப்பம்சங்கள்


# சூழ்நிலைக்கேற்பச் செயல்பட்டு, சிறப்படைவோம்

எதிர்வரும் இடர்களை நாங்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தாலும், தெளிவில்லா நிலைக்கும் எங்களைப் பழக்கப்படுத்திக் கொள்வது அவசியம்.

எங்களது புதிய சூழலில் நாங்கள் மாற்றங்களை ***உணர்ந்து***, சவால்களுக்கு ஏற்ப ***மாற்றமடைந்து***, நிச்சயமற்ற சூழலில் ***செழிப்படைய*** முயற்சி எடுப்பதற்கு நடைமுறைக்கு உகந்த அணுகுமுறை தேவை - அதனால் ஒவ்வொரு ***தலைமுறையும்*** செழிப்படையும்.



## நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு சாதனை அளவாக S$434பி[1] எட்டியது




### S$45பி[1,5] அதிகரிப்பு
**சென்ற ஆண்டைவிட**

சிங்கப்பூரைத் தளமாகக் கொண்டு பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்ட எங்களது தெமாசெக் முதலீட்டுப் பட்டியல் நிறுவனங்களும், சீனா, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளில் நாங்கள் செய்த நேரடி முதலீடுகளும் ஈட்டிய வலுவான ஆதாயமே இதற்கு முக்கிய காரணம்.

எங்கள் செயல்திறன் கண்ணோட்டத்தைப் படிக்க குறியீட்டை வருடுங்கள்

**7%**[1,6]
பங்குதாரருக்குரிய 20 ஆண்டின் ஆதாயம்

**5%**[1,6]
பங்குதாரருக்குரிய 10 ஆண்டின் ஆதாயம்

**S$52பி**[1] **முதலீடு**
உலகளாவிய மாற்றத்தின் போது வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்காக

**S$42பி**[1] **முதலீட்டெடுப்பு**
ஆதாயம் அடைவதற்காகவும், அமைப்புமுறையில் எதிரலைகளை எதிர்நோக்கும் நிலைகளின் இடர்களைக் குறைப்பதற்காகவும்

## ஆசியாவில் வேரூன்றிய உலகளாவிய முதலீட்டாளர்

வளர்ச்சியடைந்த நாடுகளில் **66%** அடிப்படை வெளிப்பாடு. எங்கள் முதலீட்டுப் பட்டியலில் பாதிக்கும் அதிகமானவை சிங்கப்பூரைத் தலைமையகமாகக் கொண்டவை.

| தலைமையகங்கள்[2] (%) | 2025 | 2015 |
|---|---|---|
| சிங்கப்பூர் | 52 | 57 |
| சீனா | 11 | 21 |
| இந்தியா | 5 | 2 |
| ஆசிய பசிபிக் (சிங்கப்பூர், சீனா, இந்தியா தவிர்த்து) | 2 | 5 |
| அமெரிக்கா | 19 | 7 |
| ஐரோப்பா, மத்திய கிழக்கு & ஆப்ரிக்கா | 11 | 8 |

| துறை[2,7] (%) | 2025 | 2015 |
|---|---|---|
| போக்குவரத்து மற்றும் தொழில்துறைகள்[8] | 22 | 22 |
| நிதிச் சேவைகள் | 22 | 28 |
| தொலைத்தொடர்பு, ஊடகம் மற்றும் தொழில்நுட்பம் | 20 | 24 |
| பயனீட்டுத்துறை மற்றும் நிலச்சொத்து | 13 | 15 |
| உயிறறிவியல் மற்றும் வேளாண்-உணவு | 7 | 3 |
| பல துறை நிதிகள் | 9 | 5 |
| மற்றவை (கடன் உட்பட) | 7 | 3 |


| அடிப்படை நாட்டு வெளிப்பாடு[2,7] (%) | 2025 | 2015 |
|---|---|---|
| சிங்கப்பூர் | 27 | 28 |
| சீனா | 18 | 27 |
| இந்தியா | 8 | 5 |
| ஆசிய பசிபிக் (சிங்கப்பூர், சீனா, இந்தியா தவிர்த்து) | 11 | 19 |
| அமெரிக்கா | 24 | 11 |
| ஐரோப்பா, மத்திய கிழக்கு & ஆப்ரிக்கா | 12 | 10 |

| பணமாக்கம்[2] (%) | 2025 | 2015 |
|---|---|---|
| பணமாக்கக்கூடிய மற்றும் துணை-20% பட்டியலிட்ட சொத்துகள்[9] | 29 | 34 |
| பட்டியலிட்ட பெரிய பங்கு தொகுப்புகள் (≥20% மற்றும் <50% பங்கு) | 11 | 12 |
| பட்டியலிட்ட பெரிய பங்கு தொகுப்புகள் (≥50% பங்கு) | 11 | 21 |
| பட்டியலிடாத சொத்துகள் | 49 | 33 |

## மீள்திறன்மிக்க முற்போக்கான முதலீட்டுப் பட்டியலை அமைத்தல்

கால ஓட்டத்தில் குறுகிய வகை விளைவுகளைக் கொண்ட நிலையான மதிப்பை வழங்கும் **மீள்திறன்மிக்க நீண்டகால முதலீடுகளும்**, வலுவான வளர்ச்சி வாய்ப்புகளும் நீண்டகாலத்தில் மதிப்பைப் பெருக்கக்கூடிய ஆற்றலும் கொண்ட **பயன்மிகு உட்கூறுகளும்** இதில் உள்ளடங்கும்.

### முதலீட்டுப் பட்டியலின் பிரிவுகள்[5]




**சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட தெமாசெக் முதலீட்டுப் பட்டியல் நிறுவனங்கள்**
≥20% பங்கு, நிலையான, நீடித்து நிலைக்கவல்ல மதிப்பு
DBS, Singtel, Singapore Airlines, ST Engineering, PSA

**உலகளாவிய நேரடி முதலீடுகள்**
நிலைப்பெற்ற, தலையெடுத்துவரும் சந்தைத் தலைவர்கள்
adyen, Tencent 腾讯, BlackRock, manipalhospitals, sea

**பங்காளித்துவங்கள், நிதிகள், சொத்து நிர்வாக நிறுவனங்கள்**
வாய்ப்பு வகைகள் விரிவாக்கம், இணை முதலீடு, மூலதனத் தீர்வுகள் அதிகரிப்பு
SEVIORA, Brookfield, Decarbonization Partners (BlackRock | TEMASEK), vertex, 65 Equity Partners

## முதலீட்டுப் பட்டியல் இலக்குகளுக்கு ஏற்ப நம்பிக்கையளிக்கும் வாய்ப்புகளைக் கைப்பற்றுதல்

**செயற்கை நுண்ணறிவு**
மதிப்புவாய்ந்த செயற்கை நுண்ணறிவுத் துறையில் நம்பிக்கையளிக்கும் நிறுவனங்களில் முதலீடு செய்யப்படும்
AI Infrastructure Partnership (AIP)[10], NVIDIA

**மூல-மேம்பட்ட உள்கட்டமைப்பு**
உள்கட்டமைப்புச் சொத்துகளில் முதலீடு செய்வதன்மூலம் மீள்திறனும் பணமாக்க ஆற்றலும் வளர்க்கப்படும்
NEOEN, sembcorp

**மாற்றுச் சொத்துகள்**
பங்குமுதல்களுக்கு அப்பால் தனியார்க் கடன், மாற்றுக் கருவிகள் போன்ற சொத்து வகைகளில் பன்மயம் விரிவுபடுத்தப்படும்
ARANDA Principal Strategies, EQT

**தலையெடுக்கும் தொழில்நுட்பம்**
பகுக் கணிப்பு, இயந்திரவியல், பொருள் வகைகள் போன்ற துறைகளில் தலையெடுக்கும் STEM தொழில்நுட்பங்கள் முன்னேற்றப்படும்

**புத்தாக்கம்**
செயற்கை நுண்ணறிவு பயன்முறை முனைப்புகள், விண்வெளித் தொழில்நுட்பங்கள், இணையப்பாதுகாப்பு மூலம் புத்தாக்கம் தூண்டப்படும்


**நீடித்த நிலைத்தன்மை தீர்வுகள்**
நீடித்த நிலைக்கத்தக்க விமானப் போக்குவரத்து எரிபொருள்கள், கரியமிலவாயு சேகரிப்பு போன்ற பெரிய அளவில் செயல்படுத்தக்கூடிய பருவநிலைத் தீர்வுகளின்மூலம் கரியமிலவாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் முயற்சி துரிதப்படுத்தப்படும்

## நீடித்த நிலைத்தன்மையே மையம்

ஆண்டின்போது, நீடித்து நிலைக்கவல்ல வாழ்க்கை நடைமுறைப் போக்குக்கு ஏற்ப நாங்கள் **S$4 பில்லியன்** முதலீடு செய்தோம்.

**நாங்கள் கவனம் செலுத்தும் அம்சங்கள்**
உணவு, தண்ணீர், கழிவு, எரிசக்தி, பொருட்கள், சுற்றுப்புறம் காக்கும் போக்குவரத்து, (மனிதனால்) உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல்

**நீடித்த நிலைத்தன்மையில் கவனம் செலுத்தும் முதலீடுகள்**
AIRA, AMOGY, electra, Zipline




**பருவநிலை மாற்றத்தில் முதலீடுகள்**
Atlantica Sustainable Infrastructure, TOPSOE

எங்களது நீடித்த நிலைத்தன்மை அறிக்கையைப் படிக்க குறியீட்டை வருடுங்கள்

## சிங்கப்பூரிலும், ஆசியாவிலும், அதற்கு அப்பாலும் சமூக நன்மைகளைத் தூண்டுதல்

2003 முதல், எங்களது இடர் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவுக்கு மேற்பட்ட நிகர லாப ஆதாயங்களின் ஒரு பகுதியை சமூக அன்பளிப்புகளுக்காக ஒதுக்கி வருகிறோம். தெமாசெக் வழங்கும் அன்பளிப்புகளின் அடிப்படைப் பயனாளரான தெமாசெக் அறநிதி, எங்களது லாப நோக்கற்ற பங்காளிப்பாளர்கள் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்திட மானியங்கள் வழங்குகிறது.

**மக்களை இணைத்து, சமூகங்களுக்குக் கைகொடுத்து, நம் பூமியைப் பாதுகாத்து, ஆற்றல்களை வளர்க்க**, தமது சுற்றுவட்டத்திலும் வெளிதரப்புத் தொடர்புக் கட்டமைப்புகளிலும் உள்ள ஆற்றல்களையும் இணைதிறன்களையும் பயன்படுத்துகிறது.

**கொடையும் நன்மையும்**
TEMASEK FOUNDATION, CIIP, Mandai Nature, Philanthropy Asia Alliance, SAC Stewardship Asia Centre, TEMASEK Lifesciences Laboratory, TEMASEK SHOPHOUSE, TRI-SECTOR ASSOCIATES, WMI Wealth Management Institute, ACC Asia Centre for Changemakers

**TEMASEK TRUST**
சிங்கப்பூரிலும் அதற்கு அப்பாலும் **சுமார் 4.4 மில்லியன் பேரின் வாழ்க்கையில் நன்மை உண்டானது**

**சொத்து, முதலீட்டு நிர்வாகம்**
Temasek Trust Asset Management, abc IMPACT

**சமூகப் பொருளியல் நிறுவனமும் மேம்பாடும்**
Catalytic Capital for Climate & Health By Temasek Trust, CO/AXIS By Temasek Trust, MoneyOwl By Temasek Trust, T-Prep, Temasek Trust Foundation Advisors

1 எங்களது பட்டியலிட்ட முதலீடுகளைப் பங்கு விலைகளிலும் பட்டியலிடாத முதலீடுகளைச் சேதாரம் கழிக்கப்பட்ட ஏட்டு மதிப்பிலும் மதிப்பிட்டதன் அடிப்படையிலானது. இந்த விளம்பரத்தில் இடம்பெற்றுள்ள நிதிநிலைப் புள்ளிவிவரங்கள் அனைத்தும் 31 மார்ச் 2025 நிலவரப்படி S$434 பில்லியனாக இருந்த எங்களது நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பைச் சார்ந்தவை.
2 31 மார்ச் நிலவரப்படி.
3 அதேபோன்ற கணக்கீட்டு முறையைப் பயன்படுத்தும்போது, 31 மார்ச் 2025, 2024, 2023 மற்றும் 2022 முடிவுற்ற நிதி ஆண்டுகளைப் பொறுத்தவரை, எங்களது பட்டியலிடாத முதலீட்டுப் பட்டியலை சந்தைக்கேற்ப மதிப்பிட்டால் நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு முறையே S$469 பில்லியன், S$420 பில்லியன், S$411 பில்லியன் மற்றும் S$438 பில்லியனாக இருக்கும்.
4 எங்களது பட்டியலிடாத முதலீட்டுப் பட்டியலைப் பொறுத்தவரை, முதலீட்டைப் பெறும் நிறுவனத்தின் அண்மை நிதிதிரட்டு, ஒப்பிடத்தக்க பொது நிறுவனங்களின் சந்தைப் பெருக்கம், அல்லது வருமான அணுகுமுறை போன்ற சந்தை அணுகுமுறைகளின் அடிப்படையில் மதிப்பீட்டை நாங்கள் குறிக்கிறோம்.
5 31 மார்ச் 2025 நிலவரப்படி.
6 31 மார்ச் 2025 நிலவரப்படி, 1 வருட மொத்த பங்குதாரர் வருமானம் S$ அடிப்படையில் 11.8% ஆக இருந்தது.
7 அடிப்படைச் சொத்துகளின் அடிப்படையிலான பகிர்வு.
8 போக்குவரத்து மற்றும் தொழில்துறைகள் பிரிவில் எரிசக்தியிலும் வளங்களிலும் செய்த முதலீடுகள் உள்ளடங்குகிறது.
9 பெரும்பாலும் ரொக்கம், ரொக்கச் சமன்கள், மற்றும் துணை-20% பட்டியலிட்ட சொத்துகள்.
10 தெமாசெக் 31 மார்ச் 2025 தேதிக்குப் பிறகு செயற்கை நுண்ணறிவு உள்கட்டமைப்புப் பங்காளித்துவத்தில் சேர்ந்தது.
11 நீடித்து நிலைக்கவல்ல வாழ்க்கை நடைமுறைப் போக்கின்படியான பட்டியலிட்ட, பட்டியலிடாத முதலீடுகள் உள்ளடங்கும், இதர சொத்துகளும் பொறுப்புகளும் உள்ளடங்கவில்லை.

**tmsk.sg/whatsapp தளத்தில் சேருங்கள்**

தெமாசெக் ஆய்வு 2025 முழு அறிக்கையை **temasekreview.com.sg** இணையத்தளத்தில் வாசியுங்கள்

TEMASEK